# மனமாற்றத்தின் ஒரு முன்மாதிரி [8:26-40]

*எனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே, எத்தி யோப்பிய மந்திரியின் மனமாற்ற நிகழ்ச்சியே நான் மிகவும் விரும்பிப் பிரசங்கிக்கும், மனமாற்றத்திற்கான முன்னுதாரண மாய் இருக்கிறது. மற்ற முன்னுதாரணங்கள் சில விபரங்களைத் தெளிவாகத் தருவதாயிருக்கலாம் (ஞானஸ்நானத்தின் நோக்கம் அப். 2ல் தெளிவாய் உள்ளது போன்றவை); ஆனால், மன மாற்றத்தின் முழு உருவையும் அழகான எளிய வழியில் நமக்குத் தருவதில் அப். 8:26-40ஐத் தவிர வேறு சிறந்த ஒன்றிருப்பது கடினமாகும். மாபெரும் பிரசங்கியாரான மார்ஷல் கீபிள் அவர்கள் இதை "ஒரு முன்மாதிரியான மனமாற்றம்" என்று அழைத்தார். J.W. ராபர்ட்ஸ் அவர்கள் இதை, "முக்கிய அம்சங் களில் எக்காலத்திற்கும் பொருந்தி வரும் ஒரு முன்மாதிரி" என்று அழைத்தார். இந்த "முன்மாதிரி மனமாற்றத்தை" ப் படிக்கையில் நாம் ஒவ்வொருவரும் தத்தமது சொந்த மனமாற்றத்தை இத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பது தேவையாகும்.*

## *ஒரு முன்மாதிரியான ஊழியர்: பிலிப்பு (8:26, 27)*

*நமது வேத வசனப்பகுதி, பின்பு, கர்த்தருடைய தூதன்*[1] *பிலிப்பை நோக்கி: "நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமி லிருந்து காசா (ஆதி. 10:19; 2 இரா. 18:8) பட்டணத்துக்குப் போகிற வனாந்தர மார்க்கமாய்ப் போ" என்றான். அந்தப்படி அவன் எழுந்து போனான் (வ. 26, 27) என்று துவங்குகிறது. நாம் குறிப்பிட்டுள்ளபடி, அதிகாரம் 6ல் பந்தி விசாரணைக்கு நியமிக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவராக இந்த பிலிப்பு இருந்தார். பின்னால் இவர் "சுவிசேஷகனாகிய பிலிப்பு" என்று*

*அறியப்பட்டார் (21:8).*

*ஆத்துமாக்களைப் பற்றி அக்கறையுடைவரானதால் இந்த பிலிப்பு நமக்கு ஒரு முன் மாதிரியாவார். சமாரியாவில் மிகப் பெரிய எழுப்புதலை அவர் ஏற்படுத்தினார். நூற்றுக்கணக் கானவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள். ஒரு மனிதரிடம் சென்று பிரசங்கிக்கும்படி அவரிடம் தேவன் கூறியபோது அவர் தயக்கமடையவில்லை! "அந்தப்படி அவன் [உடனே] எழுந்து போனான்." பிலிப்பைப் பொறுத்த வரையில் எந்தக் கூட்டமும் சிறியதாய் இருக்கவில்லை!*

## ஒரு முன்மாதிரியான கேட்பவர்: மந்திரி *(8:27-31)*

*பிலிப்பு தாம் செல்லும்படி கூறப்பட்ட இடத்தை அடைந்த போது, அடுத்து என்ன நடக்கும் என்பது பற்றி அநேகமாக அவர் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். ஆனாலும் நீண்ட நேரம் அவர் அவ்விதம் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லா திருந்தது. ஏனெனில் சீக்கிரத்திலேயே ஒரு இரதம் அங்கு தெரிந்தது: ''அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜ ஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தி யோப்பியனாகிய[2] ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருச லேமுக்கு வந்திருந்து;" (வ. 27ஆ). உயர்ந்த இடத்திலிருந்த இந்த அரசியல்வாதி - எத்தியோப்பியாவின் அனைத்துச் செல்வங் களுக்கும் பொருளாளர் - தேவபக்தியுள்ளவராயிருந்தார்! நான் இதைக் காண விரும்புகிறேன்! (மார்க்க விஷயங்கள் அரசியலில் கனப்படுத்தப்படும் [அமெரிக்காவின்] ஒரு பகுதியில் நான் வாழ்வதைப் பற்றி மகிழ்ச்சியடைகின்றேன்.)*

*இந்த அதிகாரியைப் பற்றி நாம் அதிகமாக அறியவில்லை. எத்தியோப்பியர்களால் இப்பணியில் நியமிக்கப்பட்டிருந்த இவர் ஒரு யூதரா அல்லது எத்தியோப்பியராயிருந்து யூத மார்க்கத்தமைந்தவரா என்பதை நாம் அறியவில்லை.[3] நாம் இதை மட்டும் அறிகிறோம்: அவர் தமது மார்க்கத்தைப் பற்றி வினயமுள்ளவராகவும், தமது விசுவாசத்தில் உண்மையுள்ள வராகவும் இருந்தார்! தேவனை ஆராதிப்பதற்காக அவர் தமது இல்லத்திலிருந்து நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்து*

எருசலேமுக்குச் சென்றார். அவர் எருசலேம் சென்றடைகையில் தேவாலயத்தின் பரிசுத்தமான பகுதிக்குள் அனுமதிக்கப்படுவது கூடுமா என்று அறியாத நிலையிலும், அவர் அந்த நீண்ட பயணத்தை மேற்கொண்டார்.

இந்த எத்தியோப்பிய அதிகாரி ஒரு அலியாக இருந்தார் என்று லூக்கா குறிப்பிட்டது ஏன் என்று நான் ஆச்சரியப் படுவதுண்டு. (ஆங்கில வேதாகமத்தில் இவரை Eunuch [அலி] என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் வேதாகமத்தில் இது குறிப்பிடப்படவில்லை. மொ.ர்.) அலியாக இருப்பது என்பது ஒரு மனிதன் விளம்பரப்படுத்தக் கூடிய விஷயம் அல்ல! இந்த மனிதர் தம்மை தேவனுக்கு ஒப்புக் கொடுத்திருந்த நிலையை நமக்குத் தெரிவிக்கவே லூக்கா இந்த நுட்பமான விஷயத்தைப் பகிர்ந்து கொண்டார் என்ற முடிவுக்கு நான் வருகிறேன். பழைய ஏற்பாட்டின்படி, கோசமறுபட்டவர்கள் பரிசுத்த சபைக்கு உட்படக் கூடாது (உபா. 23:1). பரிசுத்த ஆராதனையில் இந்த எத்தியோப்பியப் பிரமுகர் ஆலயக் கட்டிடத்தின் பொதுப்பகுதியாகிய புறஜாதியாரின் முற்றம் வரை மட்டுமே செல்ல முடியும். இது ஏறக்குறைய, ஒரு விசேஷ ஆராதனைக்காக ஆயிரக்கணக்கான மைல்கள் நாம் பயணம் செய்து அந்த ஆராதனை நடக்கும் கட்டிடத்தை அடைந்த வுடன், அக்கட்டிடத்தின் முற்றத்தின் வரை மட்டுமே நாம் அனு மதிக்கப்படுவோம் என அறிவதற்கு ஒப்பாகும். அப்படியிருந் தும் அந்தப் பொக்கிஷதாரர், அப்பயணத்தை மேற் கொண்டார். ஆராதனையில் கலந்து கொள்ளாமல் இருப்பதை விட ஆராதனையின் சில துணுக்குகளை காண்பது சிறந்தது என்று அவர் உணர்ந்தார். (ஒன்றுமற்ற தனிநபர்கள் இந்நாட்களில், ‘‘நான் ஒன்றும் பெறுவதில்லையாதலால் ஆராதனைக்குச் செல்லுவதில்லை” என்று முறையிடுவதிலிருந்து இது எவ்வளவு மாறுபட்டதாயுள்ளது!)

ஒருவேளை இந்த மந்திரி (அலி) ஒரு விசேஷ பண்டிகைக் காக எருசலேமுக்குச் சென்றிருந்திருப்பார். அது எந்த நிகழ்ச்சி யாயிருந்தாலும், அவர் “ஊருக்குத் திரும்பிப் போகும்போது தன் இரதத்திலே உட்கார்ந்து ஏசாயா[4] தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான்” (வ. 28). இவ்விடத் தில் கிளர்ச்சியூட்டும் இன்னொரு உருவகம் காணப்படுகிறது: ஒரு அரசு அதிகாரி தாம் பயணம் செய்கையில் வேதாகமத்தைப்

*படித்துக் கொண்டிருக்கிறார்! பொதுப்பணியாளர்கள் அதிகமான பேர் இந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றினால், இவ்வுலகம் வாழ்வதற்கேற்ற சிறந்த இடமாகிவிடும்!*

*பிரசங்கியாரை, கேட்பவருக்கு அறிமுகப்படுத்த வேண்டிய நேரம் வந்தது. ஆவியானவர்: "நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள்" என்று பிலிப்புடனே சொன்னார் (வ. 29). மீண்டும் எவ்விதத் தயக்கமுமின்றி பிலிப்பு கீழ்ப்படிந்தார். அவர் இரதத்துடனே ஓடத் தொடங்கினார். "அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு:" (வ. 30அ). அங்கு ஏசாயா 53லிருந்து வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. பிலிப்பு அவ்வதிகாரியிடம் சத்தமிட்டு, "நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா?" (வ. 30ஆ) என்று கேட்டார். பிலிப்புவின் நோக்கங்கள் நல்லவையாகவே இருந்தன; அம்மனிதருக்கு, எதிலிருந்து போதிக்கத் தொடங்க வேண்டும் என்று அறிவதற்கு அவர் விரும்பியிருக்க வேண்டும். ஆயினும், இவ்வார்த்தைகள் சிலருக்குத் தாங்கள் அவமானப்படுத்தப்படுவதுபோல் தோன்றக்கூடும். இம்மந்திரி, தேவன் ஒரு விசேஷித்த விஷயத்திற்காகத் தம்மை ஏன் தேர்ந்தெடுத்தார் என்பதை "ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்" (வ. 31அ) என்று பதில் அளித்ததின் மூலம் காண்பித்தார். இந்தப் பொக்கிஷதாரர் திறந்த மனதுடனும், போதிக்கப்படுவதற்கு விருப்பத்துடனும் இருந்தபடியால் ஒரு "முன்னுதாரணமான கேட்பவராய்" இருந்தார். இப்படிப்பட்ட மக்களைக் காண்பது எவ்வளவு மன எழுச்சியுள்ளதாய் இருக்கிறது!*

*மந்திரியின் இந்த வார்த்தைகள், தேவனுடைய சித்தத்தைச் சாதாரண நபர்கள் புரிந்து கொள்வது சாத்தியமல்ல என்று போதிப்பதில்லை. இரட்சிப்பு பற்றியும் சபை பற்றியும் தாங்களாகவே வேதாகமத்திலிருந்து கற்றுக் கொண்ட பல மனிதர்களை எனது வாழ்க்கையின் காலத்தில் நான் அறிந்துள்ளேன். இம்மந்திரியைப் போலவே நம்மில் அநேகருக்கு, இதில் அடுத்தவரின் உதவி தேவைப்படுகிறது என்ற உண்மையே எஞ்சி நிற்கிறது. ரோமருக்கு எழுதின நிருபத்தின் 10ம் அதிகாரத்தில், பவுல் கேட்கும் கேள்விகள், அவைகளை முதலாவதாக எழுதியபோது இருந்தது போலவே இன்றும் ஏற்றதாய் உள்ளன: "அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது*

*கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?" (ரோமர் 10:14). தேவனுடைய வசனத்தைப் போதிப்பவர், இன்றும் கூட தேவனுடைய திட்டத்தின் முக்கியமான பகுதியாக இருக்கிறார்.*

*திறந்த மனமுள்ள இந்த அதிகாரியின் சம்பவமானது நாம் உண்மையாக தேடினால், நேர்மையான இருதயமுள்ள மக்களை - தேவன் தங்களுக்குத் தேவையென்று உணரும் மக்களை - காணமுடியும் என்று அறிவிக்கின்றது. இம்மந்திரி யைப் போல அவர்கள் முக்கியமான பொறுப்புக்களைப் பெற்றிருப்பதாலும், கிறிஸ்து அவர்களுக்குத் தேவை என்பதை அவர்கள் காண மாட்டார்கள் என்று, நாம் எண்ணுவதாலும் இப்படிப்பட்ட மக்களை நாம் காணத் தவறி விடலாம். இம்மந்திரியைப் போலவே அவர்கள் தங்களது மார்க்க நம்பிக்கைகளில் உறுதியாக இருப்பதாலும், அவர்கள் நம் பேச்சைக் கவனிக்க மாட்டார்கள் என்று நாம் நினைப்பதாலும், இவர்களை நாம் காணத்தவறி விடலாம். எந்த ஒரு மனிதரை யும், நாம் முன்னதாகவே எடை போட்டு விடாமல், நல்ல மற்றும் நேர்மையான இருதயங்களைத் தேட வேண்டும். அப்படிப்பட்டவர்களை நாம் காணும்போது, அவர்களைக் கர்த்தரிடத்தில் வழி நடத்த வேண்டும்!*

## *மனமாற்றத்திற்கு முன்மாதிரியான கருப்பொருள்: சுவிசேஷம் (8:30, 31, 35)*

*இவ்வரலாற்றைத் தொடர்ந்து பார்க்கு முன்பாக, இந்தப் பிரமுகரை மனம்மாற்ற தேவனால் பயன்படுத்தப்பட்ட கருப்பொருளைக் கவனிக்கச் சற்று பொறுத்திருப்போம். இன்றைய நாட்களில் சிலர், விலகியுள்ள பாவி மனந்திரும்ப வேண்டுமென்றால், அவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட "அனு பவம்'' ஒன்றைப் பெற வேண்டியது தேவை என்று நம்பு கின்றனர். இன்னும் சிலர், "பரிசுத்த ஆவியின் நேரடிக் கிரியை ஒன்று'' என்ற கால்வினின் உபதேசத்தை அறிவிக்கின்றனர். ஆகிலும் விலகியுள்ள பாவியை இரட்சிப்பதற்கு தேவன், தமது ஆவியின், இயற்கைக்கு அப்பாற்பட்ட "நேரடிக் கிரியை" எதை யும் பயன்படுத்தாமல், தமது வசனத்தையே பயன்படுத்துகிறார்*

என்று வேதாகமம் போதிக்கின்றது. பவுல், ‘‘கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; விசுவாசிக்கிற யாவருக்கும் இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனா யிருக்கிறது’’ என்று கூறினார் (ரோமர் 1:16). மேலும் அவர், “ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனு டைய வசனத்தினாலே வரும்’’ என்றும் கூறினார் (ரோமர் 10:17).

மனமாற்றத்திற்குத் தேவன் தமது வசனத்தையே பயன்படுத்துகிறார் என்பது எத்தியோப்பிய அதிகாரியின் மனமாற்றத்தில் அழகாய் விளக்கப்பட்டுள்ளது. இவ்வரலாற்றில் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு கூறு இருப்பது உண்மையே: தேவன் இருமுறை பிலிப்புவிடம் பேசினார் (தூதன் மூலமாகவும் பிறகு ஆவியானவரின் மூலமாகவும்). அது இன்னமும் ‘‘அற்புதங்களின் காலமாக’’ இருந்தது, மற்றும் தேவனின் கட்டுப்பாட்டிற்குள் இவை யாவும் நடைபெற்றது. அவர், எத்தியோப்பிய மந்திரி சத்தியத்தைக் கேள்விப்பட்டுக் கீழ்ப்படிய வாய்ப்புப் பெறுவதை நிச்சயப்படுத்திக் கொண் டார். ஆயினும் தேவன் விலகியிருந்த பாவியிடம் நேரடியாகப் பேசாமல், பிரசங்கியாரிடமே பேசினார் என்பதைக் கவனியுங் கள். அற்புதமான ஒரு “நேரடிக் கிரியை/அனுபவம்” என்பது அந்தப் பொக்கிஷதாரருக்குத் தேவையானதாயிருந்தால், தேவன் பிலிப்புவிடம் பேசாமல், அவரிடமே நேரடியாகப் பேசியிருக்க முடியும்-இதன் மூலம் அந்த சுவிசேஷகனின் நீண்ட தூர, களைப்படையச் செய்யும் பயணத்தையும் தவிர்த்திருக் கலாம்.

மந்திரியின் நிலைப்பாட்டிலிருந்து இம்மனமாற்றத்தை ஆலோசனை செய்யுங்கள். பிலிப்புவுக்குத் தரப்பட்டிருந்த தேவ செய்தியைப்பற்றி அவர் ஒன்றும் அறியவில்லை. அவரைப் பொறுத்தமட்டில், இவ்வரலாறு ஏசாயா தீர்க்கதரிசனத்தின் ஒரு தெளிவற்ற பகுதியுடனும், பிலிப்புவின் “நீர் வாசிக்கிறவை களின் கருத்து உமக்குத் தெரியுமா?’’ என்ற கேள்வியுடனும் தொடங்கிற்று (8:30). அவர் தமது இரதத்திற்குள் வரும்படி பிரசங்கியாரை அழைத்தார், அவ்வாறு அவர்கள் பயணம் செய்கையில், பிலிப்பு “இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்” (வ. 35). பிலிப்பு, இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிற சுவிசேஷத்தை (ரோமர் 1:16)

*பிரசங்கித்தார்! அந்தப் பொக்கிஷதாரர் இச்செய்தியைக் கேட்டபொழுது, அவர் இதை விசுவாசித்து, இதற்குக் கீழ்ப் படிந்தார் (8:36-39). "கூறப்படும்போதுள்ளதைக் காட்டிலும் தானாகவே நன்றாகவே உணர்வு பெற்றதால்" அவர் இரட்சிக் கப்படாமல், பிரசங்கத்தின் மூலம் அவரது இருதயத்தில் விசுவாசம் உண்டானதால் அவர் இரட்சிக்கப் பட்டார் (ரோமர் 10:17)! நேர்மையான பாவியையும், பிரசங்கியாரையும் ஒன்றுகூடச் செய்வதே தேவனுடைய திட்டமாகும் - அதன் பிறகு வசனமானது தனது பணியைச் செய்யும்படி விடுகின்றார்! நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால், அற்புதமான "அனுபவத்திற்காக" காத்திராமல், சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியுங்கள்!*

*இச்சம்பவத்தில் தேவனுடைய இடையீடானது, விலகி யிருக்கும் பாவி அற்புத அனுபவம் ஒன்றைப் பெற வேண்டும் என்று நிரூபிப்பதில்லையென்றாலும், இழந்து போகப்பட்டவர் களின் மேல் தேவன் கொண்டுள்ள அக்கறையை இது விளக்குகிறதென்று நான் நம்புகிறேன், விசேஷமாக "நேர்மை யான மற்றும் நல்ல இருதயம்" கொண்டுள்ள இழந்து போகப் பட்டவர்கள் மேல் தேவன் அக்கறையாய் உள்ளார் (லூக். 8:15). உண்மையாகவே சத்தியத்தைத் தேடுபவர்கள் சத்தியத்தைக் காண தேவன் உதவுவார் என்ற கருத்து இங்கு மறைமுகமா யிருப்பதாகக் கூட நான் நம்புகிறேன் (மத். 7:7, 8). தேவனு டைய சத்தியத்தைக் கண்டறிய நேர்மையுடன் செயல்பட்ட பல ஆண்கள் மற்றும் பெண்கள் அவர்களுக்கு சத்தியத்தைப் போதிக்கக் கூடியவர்களுடன் தொடர்பு கொண்ட-தற்செய லானது என்று கருத முடியாத-பல எடுத்துக்காட்டுகள் எனது மனதில் வருகின்றன.*

*ரிக் ஆட்ச்லி அவர்கள், டெக்ஸாஸில் உள்ள வாகோ அருகில் ஒரு தியான கூட்டத்தில் தாம் சந்தித்த வார்ட் என்ற இளைஞனைப்பற்றிக் கூறினார். புரூக்ளீன் நகரத் தெருக்களில் வளர்ந்த வார்ட், பிறகு டல்லாஸ் நகருக்குச் சென்றார். அவர் அந்நகருக்குச் சென்ற சில நாட்களிலேயே, ஒரு பேருந்தில் பயணம் செய்கையில் தனக்கு அருகில் அமர்ந்திருந்த ஒரு இளம் பெண்ணிடம் பேசத் தொடங்கினார். அப்பெண்மணி, அவரை சபைக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். வார்ட், சபைக்குச் செல்பவரல்ல, ஆனால் டல்லாஸ் நகரில் யாரையும் அவருக்கு*

*தெரியாது, எனவே அவர் சென்றார். அங்கிருந்த மக்கள் நடிக்கிறார்களோ என்று அவர் எண்ணும் அளவுக்கு, அவர்கள் அவரிடம் நட்புறவாய்ப் பழகினார்கள். அடுத்த வாரமும் அவர் அவர்களைப் பார்க்கும்படிக்குச் சென்றார். விரைவிலேயே அவர் ஒரு கிறிஸ்தவர் ஆனார். அந்த தியான கூட்டத்தின் போது வார்ட், முகாம் முழுவதையும் சுற்றி வந்து, "நீங்கள் கிறிஸ்தவரா? நான் எப்படிக் கிறிஸ்தவன் ஆனேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று எதிர்ப்பட்ட யாவரிடமும் கூறிக் கொண்டிருந்தார் என்று ரிக் சொன்னார். இந்த நிகழ்ச்சியை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். அந்தக் குறிப்பிட்ட பேருந்து வண்டியில் அந்தக் குறிப்பிட்ட இளம் பெண்ணின் அருகில் வார்ட் அமர்ந்திருந்தபோது, அப்பெண்மணி அவரை சபைக்கு வரும்படி அழைப்பு விடுவித்தபோது இருந்த சாதக நிலைகள் யாவை? ஒருவர் நேர்மையோடு தேடுபவரா யிருந்தால், அவர் சத்தியத்தை அறிந்துகொள்ளும் வழியைத் தேவன் அவருக்கு அருளுவார் என்றே வேத வசனங்களும், அனுபவமும் என்னை நம்பச் செய்கின்றன.*

*தேவனுடைய வழியைத் தேடுவதற்கும் (யோவா. 5:39; அப். 17:11) சத்தியத்தை விரும்புகிறவர்களாயிருப்பதற்கும் (2 தெச. 2:10), நாம் ஒவ்வொருவரும் நேர்மையான இருதயங்கள் உள்ளவர்களாயிருப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது! (லூக். 8:15).*

## *முன்மாதிரியான செய்தி: இயேசு (8:31-35)*

*இப்பொழுது நாம் மறுபடியும் இந்த சம்பவத்திற்குத் திரும்பி, அம்மந்திரியின் வாழ்க்கையை மாற்றிய வசனப் பகுதியைக் காண்போம்:*

> *பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக் கொண்டான். அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்; அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர்கத்திரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும் என்பதே (8:31ஆ-33).*

இவ்வசனப் பகுதி ஏசாயா 53:7, 8ல் காணப்படுகிறது. இது ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில், பாடுபடும் ஒரு ஊழியனைப் பற்றிய பகுதியின் மையமாகும். மந்திரி பிலிப்பை நோக்கி: “தீர்க்கதரிசி யாரைக் குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக் குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டான் ” (வ. 34). யூத போதகர்கள் ஏசாயா 53 குறித்து இடறலடைந்தார்கள். அவர்கள், மேசியா ஒரு இராஜாவாக இருப்பார் என்று அறிந்திருந்தனர் - இக்கருத்து பாடுபடுதல் என்ற கருத்துடன் ஒப்புரவாக முடியாதிருந்தது. இவ்விதமாக இவ்வசனப் பகுதி மேசியாவுக்குப் பொருந்தாது என்று அவர்கள் நம்பினர், எனவே இங்கு “இது யாரைக் குறிக்கிறது?” என்ற கேள்வி எஞ்சி நிற்கிறது. சிலர் இது தேவனுடைய பெயரிடப்படாத ஒரு மனிதனை குறித்தது (ஒருவேளை ஒரு தீர்க்கதரிசி, ஒருவேளை ஏசாயா தம்மைக் குறித்தே இவ்வாறு சொல்லியிருக்கலாம்) என்று போதித்தனர். மற்றவர்கள் இது தனது விசுவாசத்திற்காகப் பாடுபட்ட இஸ்ரவேல் ராஜ்யத்தையே குறித்தது என்றும் போதித்தனர்.

பொக்கிஷதாரரின் குழப்பம், பிலிப்பு தனது போதனையைத் தொடங்க சரியான வாய்ப்பளித்தது: “அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்” (வ. 35). அது எப்படிப்பட்ட ஒரு பிரசங்கமாய் இருந்திருக்க வேண்டும்!

அந்த அதிகாரி வாசித்துக் கொண்டிருந்த வசனப்பகுதியே பிலிப்புவின் ஆரம்ப இடமாயிருந்தது. அச்சுவிசேஷகன் இவ்வசனங்கள் மேசியாவைக் குறித்தது என்று காட்டுவதை தமது முதல் பணியாகக் கொண்டார் (இது பரவலான நம்பிக்கைக்கு முரண்பாடானதாகும்). மேசியா பாடுகள் படுவார்[18] என்று ஏசாயா முன்னறிவித்தார். அடுத்து, இயேசு ஒருவரே அந்த ஒவ்வொரு விபரத்தையும் நிறைவேற்றினார் என்று பிலிப்பு வலியுறுத்தியிருக்க வேண்டும்: “அடிக்கப்படுகிற ஒரு ஆடு போல” இயேசு தோட்டத்திலிருந்து ஆலோசனைச் சங்கத்தாரிடத்திற்கும், பிறகு ரோம அதிகாரிகளிடத்திற்கும் இழுத்துச் செல்லப்பட்டார். “தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல” இயேசு தம்மைப் பற்றிய விசாரணைகள் அனைத்திலும்

தம்மைத் தற்காத்துக் கொள்ளாதிருந்தார். அவர் ஏளனம் செய்யப்பட்ட போது, துப்பப்பட்டபோது, முகத்தில் அடிக்கப் பட்டபோது தம்மையே "தாழ்த்தினார்." சட்டத்துக்குப் புறம்பான செயல்பாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக அவருக்குச் செய்யப்பட்ட போது அவரது நீடிய பொறுமையினால் "அவரது நியாயம் எடுத்துப் போடப்பட்டது."[5] அவரது இளம் வயதில் நிகழ்ந்த விரைவான மற்றும் கொடூரமான மரணமானது "அவரது வம்சத்தை யாராலே சொல்லி முடியும்?[6] ஜீவனுள் ளோருடைய தேசத்திலிருந்து அவர் அறுப்புண்டு போனார்" என்ற வார்த்தைகளில் மறைமுகமாகக் காணப்படுகிறது.

ஏசாயா 53ல் உள்ள, இயேசுவின் வாழ்வில் நிறைவேறிய, மற்ற தீர்க்கதரிசனங்களையும் பிலிப்பு குறிப்பிட்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை: அவர் மனுஷரால் புறக்கணிக்கப் பட்டவராயிருந்தார் (ஏசாயா 53:1-3). அவர் நொறுக்கப் பட்டார் (வ. 5). அவர் இரண்டு கள்வர்களுக்கு மத்தியிலே தொங்கினார் (வ. 9, 12). அவர் ஒரு செல்வந்தருடைய கல்லறை யில் புதைக்கப்பட்டார் (வ. 9). ஆயினும் இவை எல்லாவற்றுக் கும் மேலாக பிலிப்பு, மேசியா ஏன் மரிக்க வேண்டியிருந்தது- நம்மை நமது பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்காக - என்பதைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்!

> நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப் பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித்திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ, நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.
>
> கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய [இயேசுவுடைய] ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரணப் பலியாக ஒப்புக் கொடுக்கும்போது ... அவர் [தேவன்] தமது ஆத்தும வருத்தத் தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; ... அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து ... (ஏசாயா 53:5, 6, 10-12).

ஏசாயா 53ம் அதிகாரமானது பிலிப்பு தொடங்கிய இடமாக மட்டுமே இருந்தது என்று லூக்கா குறிப்பிட்டார்: "இந்த வேத

*வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்'' (அப். 8:35). ஏவப்பட்ட மற்ற பேச்சாளர் களைப் போலவே, இச்சுவிசேஷகரும் இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை மற்றும் அற்புதங்கள் ஆகியவை பற்றிய உண்மை களை மறுகண்ணோட்டமாகக் கூறியிருப்பார்: ''தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிற வராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்'' (10:38).*

*அம்மந்திரி அப்போதுதான் எருசலேமிலிருந்துவிட்டு வந்தபடியினால், இயேசு கிறிஸ்துவின் பெயர் அவருக்கு அந்நியமாய் இருந்திருக்காது. சவுலுடைய விரைவான மற்றும் கொடுமையான உபத்திரவத்தைத் தொடர்ந்து, இதற்கு முன் எப்போதும் இல்லாத வகையில் சபை வளர்ச்சி பெற்ற விதமானது ஒவ்வொரு உதட்டிலும் இயேசுவின் பெயரை உச்சரிக்கச் செய்திருக்க வேண்டும். சிலர் அவரை (இயேசுவை) சபித்திருக்கலாம்; சிலர் அவரை ஆழ்ந்த விருப்பத்துடன் நினைவு கூர்ந்திருக்கலாம்; ஆனால் அவர்கள் நடுவில் அவர் (இயேசு) செய்திருந்த யாவற்றையும் அவர்கள் மறுபடி நினைத்திருப்பார்கள். இயேசுவைப் பற்றி பிலிப்பு கூறியவை உண்மையே என்று இந்தப் பொக்கிஷதாரரும் அறிந்திருப்பார். பிலிப்பு இந்த உண்மைகளை ஏசாயாவின் தீர்க்கதரிசனத்துடன் தொடர்புபடுத்திக் காட்டியபோது, மந்திரியின் மனதில் புரிந்து கொள்ளுதல் உண்டாயிற்று - அவர் இருதயத்தில் விசுவாசம் ஏற்பட்டது.*

## *முன்மாதிரியான பதில்செயல்: உடனே கீழ்ப்படிதல் (8:36-39)*

*இது நம்மை முன் மாதிரியான பதில்செயலினிடத்தில் கொண்டு வருகிறது. பிலிப்பு இயேசுவைப் பிரசங்கித்தபோது, அவர் இயேசுவைப் பற்றி மட்டும் பிரசங்கிக்கவில்லை. இயேசு மனித குலத்திற்குச் செய்தவைகளிலிருந்து தனிநபர் ஒவ்வொரு வரும் எப்படிப் பலனையடைய முடியும் என்பதைப் பற்றியும் அவர் பிரசங்கித்தார்: அவர் இராஜ்யம் (சபை), இயேசு கிறிஸ்து வின் நாமம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றையும் பிரசங்கித் தார் (8:5, 12). பொக்கிஷதாரருக்கு பிலிப்பு அளித்த பிரசங்கத்*

*தில் இவ்வித கருத்துக்கள் இருந்ததை, அவரது (மந்திரியின்) பதில்செயல் தெளிவாக்குகின்றது: இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: "இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன" என்றான் (வ. 36).*

*ஞானஸ்நானத்தைப் பற்றிப் பிரசங்கிக்காமல் இயேசுவை முழுமையாகப் பிரசங்கிப்பது சாத்தியமற்றதாகும். இயேசுவுக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி வருகையில் யோவான் ஞானஸ்நானம் கொடுக்கிறவராக வந்தார் (யோவா. 1:30, 31). ஞானஸ்நானம் பெறும்படிக்கு இயேசுவே அறுபது மைல்களுக்கு மேல் நடந்து வந்தார் (மத். 3:13). இயேசுவின் சீஷர்கள் யோவானைப் பார்க்கிலும் அதிகமான மக்களை ஞானஸ்நானப் படுத்தினார்கள் (யோவா. 4:1). நாம் தண்ணீரினால் "பிறக்க" வேண்டும் என்று இயேசு கூறி (யோவா. 3:3, 5) ஞானஸ்நானத்தைக் கட்டளையிட்டார் (மாற். 16:16). இயேசுவின் சீஷர்கள் அவரது நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தார்கள் (அப். 2:38). ஞானஸ்நானம் நம்மைக் கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது (கலா. 3:26, 27) மற்றும் அது நம்மை அவரது சரீரத்துக்குள்ளாக்குகிறது (1 கொரி. 12:13).*

*மந்திரி, தாம் ஞானஸ்நானம் பெறும்படி இயேசு விரும்பினார் என்று அறிந்தபோது, அவர் காத்திருக்க விரும்பவில்லை. அப்பொழுது மந்திரி: "இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன" என்றான் (வ. 36). அவரது குரலில் இருந்த மன எழுச்சியை நீங்கள் கேட்க முடியவில்லையா? "இதோ! நான் முழுகுவதற்கு போதுமான ஆழமுள்ள தண்ணீர் உள்ளது! இப்பொழுதே நாம் அதைச் செய்வோம்!" ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதை அறியும்போது, சிலர் அதை விட்டு வெளியேற வழி பார்ப்பார்கள்; இம்மந்திரி அதற்குள் வருவதற்கு வழி பார்த்தார்.*

*இயேசு, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று வலியுறுத்தினார் (மாற். 16:16). ஞானஸ்நானத்திற்கு முன்னால் விசுவாசம் ஏற்பட வேண்டும்.[7] பொக்கிஷதாரரை ஞானஸ்நானப்படுத்து முன்பு அவர் உண்மையாகவே இயேசுவில் விசுவாசம் கொண்டிருந்தாரா என்று பிலிப்பு நிச்சயித்துக் கொள்ள வேண்டியிருந்தது.*

*வசனம் 37ல் பிலிப்புவுக்கும் மந்திரிக்கும் இடையில் நடந்திருந்த கருத்துப் பரிமாற்றம் பற்றிக் கூறப்படுகிறது: [அதற்குப் பிலிப்பு: "நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை யென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி;]."* NASB *மொழிபெயர்ப்பில் இவ்வசனம் அடைப்புக் குறிகளுக்குட்படுத்தப்பட்டு, பின்வரும் அடிக்குறிப்பு தரப் பட்டுள்ளது: "அநேக கையெழுத்துப் பிரதிகளில் இவ்வசனம் அடங்கியிருக்கவில்லை." பெரும்பாலான கல்வியாளர்கள் இது மூலப் பிரதியின் பாகம் அல்ல என்று நம்புகின்றனர், ஆனாலும் இது ஆதி சபையின் நடைமுறையைத் துல்லியமாகப் பிரதிபலிக் கின்றது.*[8] *ஆதி கிறிஸ்தவர்கள் விசுவாசமில்லாத எவர் ஒருவருக் கும் ஞானஸ்நானம் கொடுத்திருக்கவில்லை யாதலால், ஞானஸ் நானம் பெற விரும்பும் ஒருவர் விசுவாசமுள்ளவராயிருப்பதை வேறு எவ்விதம் அவர்கள் கண்டு கொள்ள முடிந்திருக்கும்? பாவி ஒருவர் விசுவாசிக்கிறாரா என்று கேட்பதைக் காட்டிலும் இயல்பானது வேறு எது? - பாவியின் பதிலைக் காட்டிலும் இயல்பானது வேறு எது?*

*விசுவாசத்தை வாயினால் கூறும் இப்பதிலே "அறிக்கையிடு தல்" என்று அழைக்கப்படுகிறது - இது வேதாகமத்தின் முக்கிய மான ஒரு உபதேசமாகும் (மத். 10:32, 33; 16:16; யோவா. 9:22; 12:42; 1 தீமோ. 6:12, 13; எபி. 3:1; 10:23; 1 யோவா. 4:2, 15). அறிக்கையிடுதல் என்பது ஞானஸ்நானத்திற்கு முன்பு செய்யப்படுவதல்லாமல், தொடர்ந்து நடைபெற வேண்டிய நிகழ்ச்சியாக இருந்தாலும்,*[9] *வேதவசனங்களும், ஆதிசபையின் வரலாறும், ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன், அவரது விசுவாசத்தை அறிக்கையிடுவதைச் சுட்டிக் காட்டுகின்றன. 2:38ஐ நாம் படிக்கும்போது, மக்கள் "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால்" ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று அவ்வசனம் நேரடிப்பொருள் தருவதைக் கண்டோம் - மற்றும், இது அந்த மூவாயிரம் பேரும் தண்ணீருக்குள் இறங்குமுன் இயேசுவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதாகவே பல கல்வியாளர்கள் நம்புகின்றனர். ரோமர் 10:9, 10 ஆகிய வசனங்கள் இருதயத்தில் உள்ள விசுவாசத்தையும், வாயினால் செய்யப்படும் விசுவாச அறிக்கையையும் இணைக்கின்றன:*

... கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண் டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.

விசுவாசமும் அறிக்கையிடுதலும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ள தைக் கவனியுங்கள், அதாவது இரட்சிப்புக்கு இவ்விரண்டுமே அவசியமானவைகள், இரட்சிப்புக்கு முன்னதாகவே இவ் விரண்டும் உண்டாக வேண்டும். இவை இரண்டும் இரட்சிப் புக்கு முன்பாகவே இருக்க வேண்டும் என்பதாலும், ஞானஸ் நானத்திலே கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நாம் இரட்சிக்கப் படுவதாலும் இவை இரண்டும் ஞானஸ்நானத்திற்கு முன்பே ஏற்பட வேண்டும்.[10]

ஞானஸ்நானத்திற்கு முன்பு மக்கள் என்ன அறிக்கையிட வேண்டும் என்பதற்கு முன் தீர்மானிக்கப்பட்ட விதித் தொகுப்பு (அல்லது சூத்திரம்) எதுவும் இல்லை. மத். 10:32ல் கிறிஸ்துவை அறிக்கை செய்தல் என்று மட்டுமே கூறப்படுகிறது. மத். 16:16ல் பேதுரு இயேசுவிடம், “நீர் ஜீவனுள்ள தேவனு டைய குமாரனாகிய கிறிஸ்து” என்று அறிக்கை செய்தார். ஆதி சபையில் “இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கின்றேன்” என்பது ஒரு எடுத்துக்காட்டான அறிக்கை யாய் இருந்திருக்க வேண்டும் என்பதை அப். 8:37 சுட்டிக் காட்டுகின்றது. இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது, இயேசுவே நம்மை இரட்சிப்பவர்,[11] அவரே அபிஷேகம் செய்யப்பட்டவர் (அதாவது நமது இராஜா) மற்றும் தெய்வீகமானவர் என்று நம்புகிறோம் என்பதை அறிக்கை செய்யத் தேவையாகும். இப்படிப்பட்ட அறிக்கை ஒரு வெறுங் கூற்றாய் இருப்பதில்லை; இது கர்த்தருக்கு நம்மை ஒப்புக் கொடுத்தல் ஆகும்! நம்மையே நாம் அவரது கரங்களில் ஒப்படைத்து - அவரது கட்டளைகளைச் செய்ய நம்மை பிணையப்படுத்துகிறோம்!

மந்திரியின் வாழ்க்கை பற்றியோ, அல்லது வேதாகமத்தின் மாபெரும் உபதேசங்களை எல்லாம் அவர் புரிந்து கொண்டுள் ளாரா என்பதைப்பற்றியோ பிலிப்பு கேள்விகள் கேட்கவில்லை. ஞானஸ்நானம் பெற விரும்புவோரிடம் கேட்பதற்கு “இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று நீங்கள் உங்கள் முழு

இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா?"[12] என்ற ஒரே ஒரு கேள்வி மட்டுமே நமக்கு அங்கிகரிக்கப்பட்டுள்ளது. ஞானஸ் நானம் பெற்று வருகின்ற ஒவ்வொருவருமே தவறான புரிந்து கொள்ளுதல்களோடும், வாழ்க்கையில் மாற்ற வேண்டிய பல விஷயங்களோடுமே உள்ளனர். ஆயினும் அவர் தமது வாழ்வு முழுவதும் தமது புரிந்து கொள்ளுதலையும், நடக்கைகளையும்-தேவன் மற்றும் அவரது சகோதர சகோதரிகளின் உதவியினால்-திருத்திக் கொள்ளும்படியான பணிகளைச் செய்ய வேண்டி யுள்ளது (மத். 28:19, 20).

மேலும், பிலிப்பு மந்திரியிடம் அவர்கள் "அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை வரை காத்திருக்க வேண்டும்"[13] என்று கூற வில்லை என்பதையும் கவனியுங்கள். புதிய ஏற்பாடு எழுதப் பட்டுக் கொண்டிருந்த காலங்களில், பாவிகள் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்ததும், அதை உடனே - அங்கேயே, அப்போதே - செய்தனர். மந்திரி தாம் ஞானஸ் நானத்திற்குத் தயாரானதைப் பற்றி பிலிப்புவை நம்பச் செய்த உடனே, "இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார் கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்" (8:38).

நாம், 2:38ஐப் படிக்கும்போது "baptism" என்ற வார்த்தை "முழுகுதல்" என்று பொருள் தரும் கிரேக்க வார்த்தையின் ஒலி பெயர்ப்பு என்பதைக் குறிப்பிட்டோம். ஆயினும் ஞானஸ் நானம் என்றால் முழுகுதல் என்று அறிவதற்கு நீங்கள் கிரேக்க மொழியை தெரிந்திருக்க வேண்டியதில்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டி ருந்த காலங்களில் மக்கள் எவ்விதம் ஞானஸ்நானப்படுத்தப் பட்டார்கள் என்று காண்பதேயாகும்.[14] பிலிப்புவும், பொக்கிஷ தாரரும் தண்ணீருள்ள இடத்திற்கு வந்தார்கள் (8:36), பிரசங்கியார் அந்த அதிகாரியை ஞானஸ்நானப் படுத்தும்படி, அவர்கள் இருவரும் தண்ணீருக்குள் இறங்கினர் (வ. 38), மற்றும் அவர்கள் அதன் பிறகு தண்ணீரிலிருந்து கரையேறினர் (வ. 39).[15] இச்சொற்றொடர்கள் யாவும் முழுகுதல் என்ற நடைமுறை வழக்கத்திற்கே ஏற்றவைகளாயுள்ளன; ஊற்றுதல் அல்லது தெளித்தல் போன்ற வழக்கங்களுக்கு ஏற்றவைகளாயிருப்ப தில்லை. J.W. McGarvey அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

தெளித்தலை நடைமுறைப்படுத்தும் பிரசங்கியார்களை இப்போது தண்ணீரை விட்டு வெளியே நிறுத்தி வைத்துள்ள அதே காரணங்களே பிலிப்புவையும் மந்திரியையும் அதை (தெளித்தலை) விட்டு நீங்கச் செய்திருக்கும். இதற்கு மாறாக, முழுகுதலை இன்றைய நாட்களில் நடைமுறைப்படுத்தும் பிரசங்கியார்கள் தண்ணீருக்குள் செல்லும் அவசியத்தை எந்தக் காரணங்களால் வற்புறுத்துகின்றார்களோ, அதே காரணங்களுக்காகவே பிலிப்பும் மந்திரியும் அவ்வாறு செய்ய வேண்டியதாய் இருந்திருக்கும்; கள்ளமற்ற இருதயம் இம்முடிவிலிருந்து தப்பிக்க முடியாது.

யாரோ ஒருவர் கூற்றுப்படி, உடலின் ஒரு முனையை முழுக விட்டு, மறுமுனையில் (தலையில்) தெளித்தல் என்பது அறிவார்த்தமானதல்ல!

சபையில் முழுகுதல் ஞானஸ்நானமே நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது என்பது வரலாற்றினால் மெய்ப்பிக்கப்பட்ட உண்மையாகும். இது பிரிவு சபையாரால் மாற்றப்பட்டது. ஐரோப்பாவின் பல பகுதிகளுக்கு நான் பயணம் சென்றுள்ளேன், அங்கு ஆதி நூற்றாண்டுகளில் சபையில் பயன்படுத்தப்பட்ட ஞானஸ்நானத் தொட்டிகளைப் பார்த்துள்ளேன். அவைகளில் ஒரே சமயத்தில் பன்னிரெண்டு அல்லது சில இடங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் முழுக்காட்டுவதற்கேற்ற வகையில் அமைந்திருந்த பழங்கால ஞானஸ்நானத் தொட்டிகளின் எஞ்சியுள்ள பகுதிகளைப் பார்த்தேன். பிலிப்பு மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்த வழிமுறையானது விதியாகும்; விதிவிலக்கு அல்ல.

பிலிப்பு பொக்கிஷதாரரை முழுக்காட்டிய பிறகு, "அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல்" (வ. 39அ). இது, பரிசுத்த ஆவியானவர் பிலிப்பை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குக் காற்றிலே தூக்கிச் சென்றுவிட்டார் என்று பொருள்படக் கூடும், ஆனால் ஆவியானவர் பிலிப்புவிடம் வேறு ஒரு இடத்திற்குச் சென்று பிரசங்கிக்கும்படி கூறினார் என்பதே ஏற்ற பொருளாகும் (வ. 26, 29, 40). மந்திரியின் வாழ்க்கையில், பிலிப்பு வந்த வேகத்திலேயே சென்றுவிட்டார்![16]

வசனம் 39ன் நிறைவுப் பகுதியில் பொக்கிஷதாரரை நாம் கடைசியாகப் பார்க்கிறோம்: "சந்தோஷத்தோடே தன் வழியே

*போனான்.'' பின்வருவனவற்றைப் பற்றி அவர் சந்தோஷ மடைந்தார்: அவர் இயேசுவைப் பற்றி அறிந்தார்! அவரது முழு வாழ்க்கையும் மாற்றமடைந்தது! கடந்தகாலப் பாவங்களி லிருந்து அவர் இரட்சிக்கப்பட்டு தமது வாழ்க்கையில் தேவ பிரசன்னத்தைப் பெற்றுக் கொண்டார் (2:38)! அவர் கர்த்தரால் அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் (2:41, 47)! அவரது பெயர் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டது (வெளி. 20:15)! நித்திய ஜீவனின் நம்பிக்கையை அவர் பெற்றிருந்தார் (தீத்து 1:3)! அலி என்ற முறையில் யூதர்களின் இராஜ்யத்தில் அவர் இரண்டாந்தரக் குடிமகனா யிருந்தார் - ஆனால் இப்போது அப்படியல்ல! இயேசுவின் இராஜ்யத்தில் அவர் முதல்தரக் குடிமகனாய் ஆனார்![17]*

*பழங்கால எழுத்தாளர்களில் ஒருவரான இரேனியு என்ற பெயருடையவர், இந்த மந்திரி எத்தியோப்பியாவிற்குத் திரும்பிச் சென்று அந்த நாடு முழுவதும் கிறிஸ்துவின் வரலாற்றைப் பரப்பியதாகக் கூறினார். இந்த அதிகாரி தமது வீடு சென்றபோது என்ன செய்தார் என்று நாம் சரியாக அறியா விட்டாலும், அவர் சந்தோஷத்தோடே சென்றார் என்று லூக்கா குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். மற்ற சீஷர்களுக்கு உண்மையானது எதுவோ, அது இந்த மந்திரிக்கும் உண்மை யாயிற்று என்று இது நமக்கு சுட்டிக்காட்டுகிறது: "அவர் சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்திருப்பார்" (8:4) என்பதில் சந்தேகமில்லை.*

## *முடிவுரை (8:40)*

*பிலிப்புவின் மற்ற பிரசங்கப் பயணங்கள் பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்துடன் இந்த அதிகாரம் முடிவடை கின்றது: "பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டு, அவ்விடத்தி லிருந்து பிரயாணம்பண்ணி, செசரியாவுக்கு வருகிற வரையில் சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டுவந்தான்" (வ. 40). ஆசோத் என்பது காசாவுக்கு சில மைல்கள் வடக்கேயுள்ள பெலிஸ்தரின் இன்னொரு பட்டண மாகும். பிலிப்பு இதன் பிறகு கடலோரமாகவே பயணம் செய்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவர் பிரசங்கித்த நகரங்களில் சிலவற்றின் பெயர்கள் அதிகாரம் 9ல் தரப்பட் டுள்ளன: லித்தா மற்றும் யோப்பா (9:32, 36). நிறைவாக அவர் செசரியா*

*நகரத்துக்கு வந்து சேர்ந்தார். அதிகாரம் 10ல் நாம் செசரியா பட்டணத்துக்குத் திரும்பிச் செல்லுவோம் - 21:8ல் நாம் மறுபடியும் பிலிப்புவைச் சந்திப்போம்.*

*நாம் முடிக்கின்ற இவ்வேளையில், நாம் படித்த "முன்மாதிரியான மனமாற்றத்தை" சுருக்கமாக மறுகண்ணோட்டம் காண்போம்: இதில் முன்மாதிரியான ஒரு பிரசங்கியார் (பிலிப்பு), முன்மாதிரியான ஒரு கேட்பவர் (மந்திரி), மனமாற்றத்திற்கான முன்மாதிரியான கருப்பொருள் (சுவிசேஷம்), முன்மாதிரியான செய்தி (இயேசு) மற்றும் முன்மாதிரியான பதில்செயல் (உடனே கீழ்ப்படிதல்) ஆகியவை இருந்தன என்று நான் கூறினேன். இந்த முன்னுதாரணத்தை முழுமையாய்க் கவனிக்கையில், இது எளிமையில் ஒரு முன்மாதிரியாகவும் உள்ளது என்று கூற விரும்புகிறேன். இந்த மனமாற்ற நிகழ்ச்சியில் என்ன செய்யப்பட்டது அல்லது ஏன் அது செய்யப்பட்டது என்பதைத் தவறாகப் புரிந்து கொள்வது கடினமாகும் (சுலபத்தில் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்).*

*உங்கள் சொந்த மனமாற்றத்தை இந்த மந்திரியின் மனமாற்றத்தோடு வைத்து அவையிரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அவருடையது போலவே உங்களுடையது இருந்ததா? இங்கு சில கேள்விகளை நீங்கள் கேட்டுக்கொள்ள விரும்பலாம்: நான் ஞானஸ்நானம் பெறுகையில் என்னை ஒப்புக்கொடுக்க தனிப்பட்ட முறையில் முடிவெடுக்கும் அளவு நான் போதுமான வயதுடன் இருந்தேனா? - அல்லது ஒரு சிறு குழந்தையாக நான் இருந்தேனா? நான் ஞானஸ்நானம் பெறுமுன் இயேசுவின்மேல் நான் கொண்ட விசுவாசத்தை அறிக்கை செய்தேனா? நான் மேற்கொண்ட உறுதிப்பாட்டை நான் புரிந்து கொண்டிருந்தேனா? - அல்லது ஒரு மார்க்கச் சடங்குக்கு உட்பட்டேனா? நான் தண்ணீரில் முழுகப் பெற்றேனா? - அல்லது வெறுமனே தெளிக்கப் பெற்றேனா? இந்த மந்திரியின் மனமாற்றம் போல் உங்கள் மனமாற்றம் இருக்கவில்லை என்று நீங்கள் கண்டால், தேவனுக்கு நன்றி! இவ்விஷயத்தைத் திருத்திக் கொள்ள இன்னமும் உங்களுக்குத் தாமதமாகவில்லை! உங்கள் ஆத்துமாவின் விஷயத்தில் நீங்கள் விளையாட வேண்டாம்! இந்த மந்திரியைப்போல் நீங்கள் மனம்மாறவேண்டியது தேவையென்றால், உடனே அதைச் செய்யுங்கள்!*

## ❦ காட்சி-உதவிக் குறிப்புகள் ❦

Gospel Services என்ற நிறுவனத்தார், "பொ க்கிஷதாரரின் மனமாற்றம்'' என்ற தலைப்பில் நிலைப்படக் காட்சிக்கான பாடம் ஒன்றைத் தயாரித்து வைத்துள்ளனர். விபரங்களுக்கு Gospel Servicesஐ தொடர்பு கொள்ளவும்: P.O. Box. 262302, Houston, TX 77207 (1-800-231-9641).

பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஒரு "இளம் பிரசங்கி யாராக" இருந்த சமயம், மந்திரியின் மனமாற்றம் பற்றி மார்ஷல் கீபிள் அவர்கள் நிக ழ்த்திய ஒரு பிரசங்கவுரையைக் கேட்டேன். அந்தப் பாடத்தைத் தழுவியே எனது தொடக்க நாட்களில் நான் அடிக்கடி பிரசங்கம் செய்து வந்தேன். ஒவ்வொரு சமயமும், அந்தப் பாடத்தைப் பயன்படுத்துவதற்கு முன்பு, அடுத்த பக்கத்தில் உள்ள விளக்கப்படத்தை நான் கரும்பலகையில் வரைவதுண்டு:

"தொழுது கொள்ளச் செ ல்லுதல்-ஆனால் தவறான முறை!" என்ற சொற்றொடரில் நான் தொடங்கி, "பிரசங்கியார் பிலிப்பு" என்பதற்குச் சென்று, இந்தச் சாலை செல்லும் வழியே ஒவ்வொரு கருத்தையும் விளக்குவதுண்டு. இது ஒரு எளிய ஆனால் செயல் திறனுள்ள அணுகுமுறையாகும். "ஒரு முன் மாதிரியான மனமாற்றம்'' என்ற இப்பாடத்தின் முக்கிய கருத்துக்களை விளக்க இவ்வரைபடத்தைப் பயன்படுத்தலாம்.

## ❦ பிரசங்கக் குறிப்புகள் ❦

"ஒரு பொக்கிஷதாரர் கர்த்தரைச் சந்தித்த நாள்'' என்ற தலைப்பில் Preacher's Periodical (இப்பொழுது Truth for Today) யின் ஜூலை 1987 இதழில் நான் ஒரு எடுத்துரைப்புப் பிரசங்கத்தை எழுதினேன். இப்பிரசங்கமானது தன் மனமாற்றத்தின் ஈவுகளான கருத்துக்களைப் பற்றி அறியாத நிலையில் இருந்த அந்த மந்திரியின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டதாகும்.

ரிக் ஆட்ச்லீ அவர்கள் இம்மனமாற்றத்தைப் பற்றி,




"மனமாற்றத்திற்கான சாலை" என்ற தலைப்பில் ஒரு பிரசங்கம் செய்துள்ளார். அது, "உங்கள் வாழ்க்கையையே மாற்றிய ஒரு பயணத்தை நீங்கள் எப்பொழுதாவது மேற்கொண்டிருக்கிறீர்களா?" என்று தொடங்கி, பின்னால், "அந்த மந்திரி தாம் எத்தியோப்பியா செல்லும் சாலையில் இருந்ததாக எண்ணினார். உண்மையில், அவர் இரட்சிப்புக்குச் செல்லும் சாலையில் இருந்தார்" என்று குறிப்பிடும். இந்தப் பிரசங்கத்தில் பேசுபவர், தேடுபவர், வசனங்கள், இரட்சகர் (Speaker, Search, Scripture, Savior) என்ற நான்கு கருத்துக்கள் உண்டு.

நடபடிகளின் இப்பகுதியைப் படிக்கையில், ''நல்ல அறிக்கை" என்பது பற்றி ஒரு துணைப் பிரசங்கம் செய்ய நீங்கள் விரும்பலாம். பவுல் ரோஜர்ஸ் அவர்களால் இந்தத் தலைப்பில் செய்யப்பட்ட ஒரு பிரசங்கம் Preacher's Periodical (இப்பொழுது Truth for Today) யின் 1985ம் ஆண்டு மே மாதப் பதிப்பில் வெளியாகியுள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, “கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்” என்ற பிலிப்புவின் எளிய செயல்பாட்டிற்கு முரண்பாடாகக் காணப்படும் பிரசங்கத் தலைப்புகளைச் செய்தித் தாள்களிலிருந்து நான் சேகரிக்கத் தொடங்கினேன். அவற்றில் ஒரு எடுத்துக்காட்டு, “ஆக்லஹாமாவின் சிறுபான்மைக் குழு என்ற முறையில் உழைப்பாளர்களின் உரிமைகள்” என்பதாகும். உங்கள் சொந்த சேகரிப்பைத் தொடங்க நீங்கள் விரும்பலாம்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, உபதேசக் கவிதைகள் என்ற தலைப்பில் T.S. பர்னட் அவர்கள் ஒரு நூலை எழுதினார். அதில் மார்க்கம் பற்றி சீர்திருத்தும் நோக்கில் அமைந்த கேலிப் பாடல்கள் நிறைந்திருந்தன. அதில் மந்திரியின் மனமாற்றத்தை விவரிக்கும் நகைச்சுவைப்பாடல் ஒன்று ‘‘ஒரு குறிப்பிட்ட தண்ணீர்’’ என்ற தலைப்பில் உள்ளது. உங்கள் அருகில் உள்ள கிறிஸ்தவக் கல்லூரியின் நூலகத்தில் முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வருதல் பற்றிய வரலாற்றுத் தொகுதியுள்ளதா என்று பார்க்க நீங்கள் விரும்பக் கூடும்.

குறிப்புகள்

[1]வசனம் 26ல் கர்த்தருடைய தூதன் ஒருவன் பிலிப்புவிடம் பேசினான்; வசனம் 29ல் ஆவியானவர் பேசினார். ஒரு வசனத்தில் தூதன் பேசுவதாகவும் அடுத்த வசனத்தில் ஆவியானவர் பேசுவதாகவும் குறிப்பிட்டபோது லூக்கா பெரிய கருத்து எதையும் முன் வைக்கவில்லை.தேவன் பிலிப்புவை வழி நடத்தினார் என்பதே லூக்காவின் கருத்தாகும். [2]எத்தியோப்பியா என்று அன்றைய நாட்களில் அழைக்கப் பட்ட நாடானது இன்றைய நாட்களில் உள்ள எத்தியோப்பியாவைப் போல அவ்வளவு தூர கிழக்கில் இருக்கவில்லை. நவீன எத்தியோப்பியா பழங்காலத்தில் அபிசீனியா என்று அழைக்கப்பட்டது. பழங்கால எத்தியோப்பியாவானது (இந்நாட்களில் நியூபியா என்று அழைக்கப்படுகிறது) மேல் எகிப்து மற்றும் சூடான் பகுதியில் நைல் நதியில் அஸ்வான் மற்றும் கார்த்தூம் ஆகியவற்றுக்கு இடையில் அமைந்திருந்தது. [3]இவர் ‘‘தேவ பயமுள்ளவரான’’ ஒரு புறஜாதியார் என்று யூகிக்கப்படுகிறது ஆனால் பின்னாளில், தேவபயமுள்ளவரான கொர்நேலியு என்பவரே புறஜாதியாரிலிருந்து முதன்முதலாக மனமாறியவர் என்று லூக்கா வலியுறுத்தினார் (அப். 10:11; 15:7, 14). அவர் எப்பொழுது கோசமறுக்கப்பட்ட வரானார் என்று நாம் அறியவில்லை (அவர் யூதமார்க்கத்தமைந்தவரான பிறகு அது நடந்திருக்கலாம்); உபா. 23:1 வசனமானது கோசமறுபட்டவர் யூதமார்க்கத் தமைவதைத் தடை செய்ததா அல்லது கோசமறுபட்டவர் பரிசுத்த கூட்டத்திற்குள் வருவதை மட்டும் தடை செய்ததா என்று நாம் அறியவில்லை; அப்போஸ் தலர்களின் காலத்திலும் உபா. 23:1க்கு யூதர்கள் கீழ்ப்படிந்து கொண்டிருந்தார்களா என்று கூட நாம் அறியவில்லை. இந்த அதிகாரி யூதராகவோ அல்லது

யூதமார்கக்த்தமைந்தவராகவோ இருந்திருக்க வேண்டும். [4]ஒருவேளை இம்மந்திரி எருசலேமிலிருந்தபோது ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள் அடங்கிய தோல் சுருளை வாங்கியிருந்திருக்கலாம். மிகவும் சிரமமான சூழ்நிலைகளில் அவைகள் கைப் பிரதியெடுக்கப்பட்டதால், அவைகள் மிகவும் விலை உயர்ந்தவைகளாயிருந்தன. [5]அவர் (தனக்குத் தரத் தகுதி பெற்ற) நியாயத்தைப் பெறவில்லை. [6]அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போனாலும், அவர் ஆவிக்குரிய சந்ததிகள் அநேகம் பெற்றவரானார் (அதாவது கிறிஸ்தவர்கள்), அவர்களை எண்ணி முடியாது என்றும் இவ்வசனப் பகுதியை மொழிபெயர்க்கும் சாத்தியக் கூறுண்டு. [7]வேதவசனத்தின் படி, குழந்தைகள் ஞானஸ்நானம் பெறக்கூடியவர்கள் அல்ல, ஏனெனில் அவர்கள் விசுவாசம் கொள்ள இயலாதவர்களாயிருக்கின்றனர். [8]தொடக்க காலக் கைப் பிரதிகளில் இவ்வசனம் இல்லையென்றாலும், இவ்வசனப் பகுதிக்கு ஆதியிலேயே தொடக்கம் உண்டு என்று இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இரேனியு மேற்கோள் காட்டியுள்ளார். ஒருவேளை ஓர் இடத்தில் வேதபாரகரால் ஒரு குறிப்பு சேர்க்கப்பட்டிருக்கலாம் (இது ஆதி சபையாரின் நடைமுறையைக் கூறுவதற்குச் செய்யப்பட்டிருக்கலாம்) இவ்வாறாகவே சில கைப்பிரதிகளில் இவ்வசனம் சேர்ந்திருக்கலாயிற்று. [9]நமது மரணம் வரையிலும் இயேசுவை நமது உதட்டினாலும், நமது வாழ்க்கையினாலும் அறிக்கை செய்ய வேண்டும். [10]இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்று நிரூபிக்க முயற்சி செய்வதற்கு சில சமயங்களில் ரோமர் 10:9, 10 பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் ரோமர் 10ல் இரட்சிப்புக்கு கீழ்ப்படிதல் அவசியமானது என்று வலியுறுத்தப்படுகிறது (வ. 16, 21). இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லையென்று ரோமர் 10:9, 10 போதிப்பதில்லை, ஏனென்றால் 1 பேது. 3:21ல் விசுவாசமும் மனந்திரும்புதலும் இரட்சிப்புக்கு தேவை என்று குறிப்பிடப்படாததினால் அவை தேவைப் படுவதில்லையென்று பொருள்படாது என்பது உண்மை. இதைப் போலவே மேற் சொன்ன வசனத்திலும் உள்ளது.

[11]"இயேசு" என்பதன் அடிப்படைப் பொருள் "யேகோவா இரட்சிக்கிறார்" என்பதாகும், இது இயேசு தெய்வீகமானவர் மற்றும் அவரே இரட்சகர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. [12]இதைக் கடந்து செல்கையில் பேதுரு (மற்றும் அநேகமாக மந்திரி) ஆகியோர் "நல்ல அறிக்கையை" ஒரு கூற்றாகக் கூறியுள்ளனர் என்பதைக் கவனிக்க வேண்டும். ஆயினும், பிலாத்துவின் கேள்விக்கு நேர்மறையான பதிலைக் (யோவா. 18:37) கூறியதன் மூலம் மட்டுமே இயேசு இந்த "நல்ல அறிக்கையைச்" செய்தார் (1 தீமோ. 6:14). எவ்வழியிலும், ஞானஸ்நானத்திற்கு முன்பு அறிக்கை செய்தல் என்பதே வேத ரீதியானதாகும். [13]வேதாகம வளையத்தில், பிலிப்பு, "சபையார் உங்களுக்கு வாக்களிக்கும் வரையில் நாம் காத்திருக்க வேண்டும்" என்று கூறவில்லை என்று குறிப்பிடுகிறேன், ஏனெனில் ஒரு நாமகரணக் கூட்டத்தில் இது நடைமுறையாக்கப்படுகிறது. நீங்கள் ஊழியம் செய்யும் பகுதிகளில் உள்ள மார்க்க நடைமுறைகளுக்கேற்ற சில விமர்சனங்களை இவ்விடத்தில் நீங்கள் இணைத்துக் கொள்ளலாம். [14]இந்தப் பாடத்தின் எண்ண ஓட்டத்துடன் கூட, ஞானஸ்நானத்தை ஒரு அடக்கம் செய்தல் என்று பவுல் வலியுறுத்தியதை நீங்கள் சுட்டிக்காட்டவும் விரும்பலாம் (ரோமர் 6:3, 4; கொலோ. 2:12). [15]மத். 3:16ல் இயேசு ஞானஸ்நானம் பெற்றவுடன் "ஜலத்திலிருந்து கரையேறினார்" எனப்படுகிறது. இதற்குத் தகுந்த இன்னொரு வேதவசனப்பகுதி யோவா. 3:23 ஆகும். இதில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் ''தண்ணீர் அதிகமாயிருந்தபடியால்'' யோவான் அவ்விடத்தில் ஞானஸ்நானம் கொடுத்து வந்ததாகக் கூறப்படுகிறது. தெளித்தலுக்கு "அதிகமான தண்ணீர்" தேவைப்படுவதில்லை; முழுகுதலுக்கு அதிகமான தண்ணீர் தேவைப் படுகிறது. [16]பிலிப்பு உடனே அங்கிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டதானது, அம்மந்திரி பிலிப்புவைப் பின்பற்றுவதை ஊக்கப்படுத்தாமலிருக்க நிகழ்ந்திருக்

கலாம். அந்த பொக்கிஷதாரர் சுவிசேஷசெய்தியுடன் தனது சொந்த நாட்டிற்குத் திரும்பச் செல்ல வேண்டும் என்பதையே தேவன் விரும்பினார் என்பதில் ஐயமில்லை. [17]இச்சம்பவம் நடக்கும் என்பது ஏசாயா 56:3-5ல் முன்னுரைக்கப்பட்டது.